பக்கங்கள் 14 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## ரணில் - பஸில் இன்றும் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 21 சனிக்கிழமை 04.05.2024 அதிர்வு 278

# ரணிலின் அழைப்பை நிராகரித்தது சஜித் அணி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்கப்போவதில்லை. அவருடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாரில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாக்க அரசுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன் வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். 04



# என்னைச் சிறையில் அடைக்க ஆளுந்தரப்பு கடும் பிரயத்தனம்

## சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சி விரைவில் மலரும் என்கிறார் மைத்திரி

**“என் அரசியல் பயணம் ஆளுந்தரப் பினருக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் என்னைச் சிறையில் அடைக்கச் சகல வழிகளிலும் முயல்கின்றனர். சிறையில் அடைக்கும் அளவுக்கு நான் குற்றம் எதுவும் செய்யவில்லை.”**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் உண்மைத் தகவல்கள் வெளியானால் தங்கள் அரசியலுக்கு வேட்டு வைக்கப்படும் என்று ஆளுந்தரப் பினரான மொட்டுக் கட்சியினர் எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் எனது அரசியல் பயணத்தை முடக்க முயல்கின்றனர்.

என் அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. நெருக்கடி நிலைமையிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விரைவில் மீட்டெடுப்பேன். சு.க.வின் தலைமையில் ஆட்சி மலரும் காலம் வெகுதொலைவில் இல்லை.” – என்றார்.

# கம்பனிகள் சட்ட நடவடிக்கைக்குத் தயாரானால் தொழிலாளர்களுக்குப் பக்க பலமாக நிற்போம்!

## ஜனாதிபதி ரணில் அதிரடி அறிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புக்கு எதிராகத் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் சட்ட நடவடிக்கை எடுத்தால் தொழிலாளர்களுக்குச் சட்ட உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய திணைக்களங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, தொழிலாளர்களுக்குச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் ஏனைய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த 04

# தமிழக அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கிழக்கு மாகாணத்தின் ஆளுநருடன் சந்திப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

தமிழக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை மரியாதை நிமித்தமாக கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருந்த தருணத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசில் நிதி அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில், இலங்கை மக்களுக்கு தமிழக அரசு வழங்கிய உதவிகளுக்கும் ஒத்துழைப்புகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நினைவு கூர்ந்தார்.



அத்துடன், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை வலுவாக பேணுவது தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடினர்.

# மது போதைக்கு எதிரான இயக்கத்தின் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கௌரவிப்பும்

வடக்கு கிழக்கு மறு வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மது போதைக்கு எதிரான இயக்கம் நடத்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் செயற்பாட்டாளர் கௌரவிப்பும் நாளை (05) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

மது போதைக்கு எதிரான இயக்கத் தலைவர் ச. சுகிர்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புப் பேச்சாளர்களாக யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் திருமதி கோசலை மதன், சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் மயூரதன், பெண்ணிலைவாதி ரஜனி ராஜேஸ்வரி, ஹெல்த்தி லங்கா நிறுவன பிராந்திய நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தே.பிறேமராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.விசேட பேச்சாளராக மது போதைக்கு எதிரான இயக்கத்தின் ஸ்தாபகர் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

# ஹஜ் பெருநாள் ரேஸ் நடாத்துவதற்கு கே.ஆர்.சீ. அமைப்பு உருவாக்கம்

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நகரில் ஆரம்ப காலங்களில் தொடராக முஸ்லிம்களின் பெருநாள்களை சிறப்பிக்கும் முகமாக கற்பிட்டி புதுக்குடியிருப்பு தேத்தாவாடி கிராமத்தில் அமைந்துள்ள ரேஸ் தரவையில் இடம்பெற்று வந்த பாரம்பரிய பெருநாள் விளையாட்டுக்களுடன் மாபெரும் மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டி நிகழ்வுகள் கடந்த சில வருடங்களாக நடைபெறவில்லை.

இதனை கருத்தில் கொண்டு கற்பிட்டியின் பாரம்பரியத்தை நிலைநாட்டும் நோக்கோடு கற்பிட்டி ரேஸ் குழு கே.ஆர்.சீ அமைப்பு ஒன்றை உருவாக்கும் கூட்டம் நேற்று இரவு கற்பிட்டி ஸ்மாட் கல்லூரியில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜே.எம் தாரீக் தலைமையில் இடம்பெற்றது.



இதன்போது எதிர்வரும் ஹஜ் பெருநாளைக்கு அடுத்த தினம் கற்பிட்டி தேத்தாவாடியில் உள்ள ரேஸ் தரவையில் கற்பிட்டியின் பாரம்பரிய பெருநாள் விளையாட்டுக்களுடன் மாபெரும் மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டிகளை நடாத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருள்கள் மற்றும் ரொக்க பணம் என்பன வழங்கப்பட வேண்டும் எனவும் இதனை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு கற்பிட்டி மக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கடற்றொழில் அமைச்சர் முகத்துவாரம் வெளிச்ச வீட்டைப் பார்வையிட்டார்

(பழுவூரான்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சனிக்கிழமை காலை மட்டக்களப்பு முகத்துவாரம் வெளிச்ச வீடு பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் .

110 வருடங்கள் பழைமை வாய்ந்த வெளிச்ச வீடு 20 வருடங்களுக்கும் மேலாக வர்ணம் பூசாமல் பழுதடைந்த நிலையில், இருப்பதை அவதானித்த அமைச்சர் உடனடியாக வர்ணம் பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளு மாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் .

இதன்போது வெளிச்ச வீட்டுக்கும் நாவலடி கடற்பகுதிக்கும் இடையே உள்ள ஏரிப்பகுதியை ஆழப்படுத்தி தருமாறு மக்கள் கடற்தொழிலாளர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்த னர். இவ்விடயத்தையும் கவனத்தில் எடுத்த அமைச்சர் ஆழப்படுத்தும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுக் குமாறு சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டு கோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.













# நீரில் மூழ்கி குடும்பஸ்தர் சாவு

## நுவரெலியாவில் சோகம்

நீராடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா, ஹங்குரங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிகாரிகம பிரதேசத்தில் உள்ள அம்பேவளை ஓயாவில் நீராடச் சென்ற நபரே சாவடைந்துள்ளார்.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று மாலை நபர் ஒருவருடன் அம்பேவளை ஓயாவுக்கு நீராடச் சென்றுள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் ரிகில்லகஸ்கட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்குரன்கெத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மனைவியைத் தாக்கிய கணவன் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிய கணவன் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்

இந்தச் சம்பவம் வாதுவை, மொல்லிகொட பிரதேசத்தில் இன்று இடம் பெற்றுள்ளது.

மேற்படி நபர் பொலிஸாரின் முன்னிலையில் தனது மனைவியைக் கொடூரமாகத் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபரும், தாக்குதலுக்கு இலக்கான அவரது மனைவியும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் ஆணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு – ஏறாவூர், செங்கலடி பகுதியில் கைவிடப்பட்ட வீடொன்றின் பின்னால் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவான் விசாரணையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் படுகொலையா அல்லது வேறு காரணமா என்று ஏறாவூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கம்பனிகள்...

சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கொட்டகலையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். இது தொடர்பில் அன்றைய தினம் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் அரசுக்கும் இடையில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் இணக்கப்பாடு இன்றி பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தன என்றும், இணக்கப்பாடு இன்றி இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது என்றும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தோட்டக் கம்பனிகளுடன் எவ்வித கலந்துரையாடலும் இன்றி சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டமையால் தாம் நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என்றும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்நிலையிலேயே பெருந்தோட்ட நிறுவனங்களின் சட்டச் சமரையும் எதிர்கொள்ள ஜனாதிபதி தயாராகியுள்ளார்.

### ரணிலின்...

இந்நிலையில், இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தருமான சுஜீவ சேனசிங்க கூறியவை வருமாறு:-

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை. எமது கட்சியை அவர் அழித்தார். புதிய தலைவர்களை உருவாக்க இடமளிக்கவில்லை. இதனால் எமது கட்சி உறுப்பினர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரணிலுடன் எமக்கு எவ்வித கொடுக்கல் – வாங்கலும் இல்லை. பலமான அரசியல் கூட்டணியாகத் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெறுவோம்.” – என்றார்.

### ரணில்...

சருமான பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான மற்றுமொரு சந்திப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

இருவருக்கும் இடையில் ஐந்தாவது தடவையாக இடம்பெறும் இந்தச் சந்திப்பு கொழும்பு – மஹகமசேகர மாவத்தையில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இறுதியாக கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ, டிரான் அலஸ், பிரசன்ன ரணதுங்க மற்றும் கஞ்சன விஜேசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் காலங்களில் எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அனைத்துக் கட்சிகளிடமும் எழுத்துபூர்வமாக ஆதரவைக் கேட்பது சிறந்தது என்றும் பஸில் ராஜபக்ஷ இதன்போது கருத்துத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அரசின் பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்



# கடற்கரை கரப்பந்தாட்ட ஆண்கள் பிரிவில் அம்பாறை அணி சம்பியனாக தேர்வானது

(கே.எ. ஹமீட்)

48 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கான கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் தற்போது மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவராஜா தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை அட்டாளைச்சேனை கடற்கரையில் இடம்பெற்ற கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சம்பியனாக அம்பாறை மாவட்டமும், பெண்கள் பிரிவில் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும், மட்டக்களப்பு மாவட்ட அணியும் பங்குபற்றின. இதில் 21-10, 21-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு அம்பாறை மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப் போட்டி அம்பாறை மாவட்ட அணிக்கும், திருகோணமலை மாவட்ட அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் 21-11, 21-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் அம்பாறை மாவட்ட அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும், மட்டக்களப்பு மாவட்ட அணியும் பங்குபற்றின. இதில் 21-08, 21-08 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு அம்பாறை மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப்போட்டி அம்பாறை மாவட்ட அணிக்கும், திருகோணமலை மாவட்ட அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் 21-02, 21-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு திருகோணமலை மாவட்ட அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் பெற்றுக்கொண்டது..

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்ட அணிகள் பங்கேற்பதுடன் குழு நிலைப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மெய்வல்லுநர் போட்டிகளுடன் மாகாண விளையாட்டு விழா நிறைவு பெறும்.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் மோசடி ஆரம்பம்

நாட்டில் தேர்தல்கள் நீதி நேர்மையாக நடத்தப்படுகின்றமையைக் கண்காணிக்கும் ‘காவல் நாய்’ போன்று செயல்படுகின்ற அமைப்புகளில் ஒன்று ‘பவ்ரல்’.

சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பாகிய ‘பவ்ரல்’ வரப்போகும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பெரும் மோசடி ஒன்று குறித்து முன்னெச்சரிக்கை அறிவிப்புக் கொடுத்திருக்கின்றது.

அது தொடர்பில் தேர்தல் ஆணையத்துக்கும் தாங்கள் முறைப்பாடு செய்து, இந்த மோசடியைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரி இருக்கின்றனர் என்று அந்த அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்திருக்கின்றார்.

ஒரு முக்கியமான தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ள நிலையில் அரசாங்கம் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்துகிறது என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிக்கிறார்.

ஏழைகளுக்கு அரிசி விநியோகம் உள்ளிட்ட இந்த முயற்சிகளுக்கு கோடிக்கணக்கான ரூபா வரிப் பணம் செலவாகிறது என்றும் அவர் கூறினார்.

“ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரதேசத்திற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக என்ற பெயரில் அரசாங்கம் தலா ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. மாகாண ஆளுநரின் விருப்பத்திற்கேற்ப இந்த நிதி பயன்படுத்தப்படும். ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியாக ஆளுநர் இருக்கிறார். இது, தேர்தலை இலக்காகக் கொண்ட முயற்சி என்பது வெளிப்படை. இது தேர்தலில் வாக்குச் சுருட்டுவதற்காக வரிப் பணத்தைத் தந்திரமாகச் செலவிடும் திட்டம்.

“ஜூலை 31 ஆம் திகதிக்குள் அனைத்து அரசாங்க வேலைத்திட்டங்களையும் முடிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

“ஜனாதிபதி தேர்தல் ஓகஸ்ட் மாதம் அறிவிக்கப்படும். எனவேதான் ஜூலை 31க்குள் திட்டங்களை முடிக்க அரசு விரும்புகிறது. அது தனது தேர்தல் நடவடிக்கைகளுக்காக பல பில்லியன் ரூபா வரிப் பணத்தையும் நாட்டின் மகத்தான பௌதீக மற்றும் மனித வளங்களையும் செலவிடுகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் எழுதவுள்ளோம்” - என்கிறார் அவர்.

‘பவ்ரல்’ அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறும் இன்னொரு விடயம் முக்கியமானது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நரித் தந்திரத்தை அது அம்பலப்படுத்தி நிற்கின்றது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகக் கூறி, அதனைப் பயன்படுத்தி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்தது. மக்களின் வாக்களிக்கும் உரிமையை தன் வசதி கருதித் தடை செய்தது. அந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசிடம் நிதியில்லையாம், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு லஞ்சம் கொடுக்கும் அளவுக்கு அரசின் கஜானாவில் பணம் உள்ளது” - என்று அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

மோசடி அரசியல்வாதிகளுக்கு மத்தியில் இந்த நாட்டில் நீதி, நியாயமான, சுயாதீனமான, ஒழுங்கான தேர்தல் ஒன்றை நடத்தி முடிப்பது சாத்தியமற்ற வேலை என்றுதான் தோன்றுகின்றது.

# சிவனொளிபாதமலையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம் அனுமதி



சிவனொளிபாதமலை யாத்திரை காலம் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் என சபரகமுவ மாகாண பிரதான சங்கைக்குரிய தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்துள்ளார்.

நல்லதண்ணி பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யாத்திரை காலம் நிறைவடைந்த பின்னர் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் சிவனொளிபாதமலைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அங்கு இடம்பெறும் சுற்றுச்சூழல் பாதிப்பை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் விசாகப் பூரணை தினத்துடன் சிவனொளிபாதமலை யாத்திரை காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் சர்வதேச ஊடக சுதந்திரதின நிகழ்வு

(எஸ்.அஷ்ரப்கான்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தினை முன்னிட்டு சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாடு செய்த நிகழ்வு கல்முனை அல்தாப் உணவகத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஜஃபர் ஜே.பி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கல்முனை கிளை தலைவர் மௌலவி ஏ.எல்.எம்.முர்ஷித் (முப்தி) ஸஹ்தி,நஜ்மி கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மௌலவி ஏ.எல்.எம். முர்ஷித்,

"நம் எல்லோருடைய நோக்கமும் எமது மரணத்துக்கு முன்னால் இந்த சமூகங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதே,

நல்ல விடயங்களை செய்கின்ற போது நாம் புகழை எதிர்பார்த்து செய்வோமேயானால் அதற்கான உண்மையான கூலி எங்களுக்கு கிடைக்காது.

ஒரு ஊடகவியலாளர் என்பவர் நரகத்தையும் சம்பாதிக்கலாம். சொர்க்கத்தையும் சம்பாதிக்கலாம். முஸ்லிம் ஊடகவியலாளர்கள் என்பவர்கள் இறைவனுக்கு பயந்து சொர்க்கத்தை சம்பாதிக்க கூடிய வகையில் இந்த ஊடகத்துறையை எவ்வாறு பயன்படுத்தி சேவை செய்ய முடியுமோ அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். நல்ல விடயங்களை வெளிக் கொண்டு வர வேண்டும்.

குர்ஆன் சொல்கிறது, ஏதாவது ஒரு செய்தி உங்களிடம் வருகின்றதா அதனை தெளிவாக அறிந்ததன் பின் தான் அதனை வெளியிடுங்கள் என்று கூறுகிறது.

எண்ணிக்கையில் குறைவானவர்களாக நாம் இருந்தாலும் இளைஞர்கள் அனுபவசாலிகள் இருந்து கொண்டு நாங்கள் சமூகத்துக்கு நல்ல விடயங்களை செய்ய வேண்டும். நபி முஹம்மத் (ஸல்) ஆரம்ப கால இஸ்லாமிய பிரச்சாரத்தின்போது குறித்த சில நண்பர்கள் மாத்திரமே அவர்களுடன் இருந்தார்கள். ஆனால் இஸ்லாம் முழு உலகுக்கும் வியாபித்ததல்லவா? எனவே தான் நாங்கள் இஹ்லாஸோடு பொறுமையும் கவலையும் வைத்து செயற்படுவோமாக இருந்தால் எமது சேவைக்கான முழு பிரயோசனத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்."– என்றார்.








# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு இரண்டரை லட்சம் ரூபா நிதி அன்பளிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் ஓ.எல். தின நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் பாடசாலையின் மருதூர் கொத்தன் கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்காக பிரதம அதிதியாக கலந்து கொண்ட தொழிலதிபர் அப்துல் அஸீஸ் அப்துல் கபீலால் அந்த இடத்திலேயே இரண்டரை லட்சம் ரூபா நிதிக்கான காசோலையை பாடசாலை அதிபர், முகாமைத்துவ குழுவினரிடம் கையளித்தார்.

அப்துல் அஸீஸ் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முழு அனுசரணையில் நடைபெற்ற, மாணவர்களின் ஆக்கத் திறனையும் கலை கலாசார நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் ஓ.எல் தின விழாவில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

அத்துடன், மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட சாதாரண தர பரீட்சையில் சகல பாடங்களிலும் 'ஏ' தர சித்தியை பெற்றுக் கொண்ட மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது, 'எழுகதிர்' நினைவு மலரும் வெளியீட்டு வைக்கப்பட்டன.

இதன் போது பாடசாலையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்த பிரதம அதிதி அப்துல் அஸீஸ் அப்துல் கபீல் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெ.எஸ்.கே.வீரசிங்க, அல் –ஹம்றா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ், அல்– ஹிக்மா அதிபர் எம்.எல்.எம். மஹ்றூப், அல் மினல் வித்தியாலய அதிபர் எஸ். எச்.எஸ்.ஹார்ஜது ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர். பாடசாலையின் நிறைவேற்று அபிவிருத்திக் குழு செயலாளர் பி.எம்.அறபாத் யசீன் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.





# அக்ஷன் யுனிட்டி லங்கா நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன

(பழுவூரான்)

அக்ஷன் யுனிட்டி லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் வவுணதீவு மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு வவுணதீவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஜப்பான் நாட்டு சிறுவர் நிதியத்தின் அனுசரணையில் வவுணதீவு மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்கு 60 துவிச்சக்கர வண்டிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அக்ஷன் யுனிட்டி லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர் நிதியத்தின் அனுசரணையில் வவுணதீவு கன்னன்குடா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மண்முனை மேற்கு கல்வி வலய பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரன் மற்றும் அக்ஷன் யுனிட்டி லங்கா நிறுவனத்தின் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.கஜேந்திரன் ஆகிய கலந்து கொண்டனர்.

அத்தோடு, இந்த நிகழ்வில் அக்ஷன் யுனிட்டி லங்கா சிறுவர் வழநிலையத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மாணவர்களின் கணித அறிவை மேம்படுத்தும் செயற்திட்டத்தில் இணைந்து சர்வதேச நீதியில் சாதனை படைத்த 28 மாணவகளுக்கும் இதன் போது சர்வதேச சான்றிதழ் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆக்ஷன் யூனிட்டி லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கே.கஜேந்திரன், திட்ட பணிப்பாளர் சுதர்சன், பணிப்பாளர் சபை தலைவி ஜே.மகேஸ்வரி, செயலாளர் கே.சத்தியநாதன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அக்ஷன் யூனிட்ரி லங்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


























# மட்டு. ஊடக அமையத்தில் உயிர்நீத்த ஊடகவியலாளர்கள் நினைவுகூரல்

(பழுவூரான்)

ஊடக சுதந்திர தினமான நேற்று வெள்ளிக்கிழமை உயிர்நீத்த ஊடகவியலாளர்களை நினைவு கூரும் நிகழ்வு மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உயிர்நீத்த ஊடகவியலாளர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக அகல் விளக்கேற்றப்பட்டு, அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.









# மனித உரிமைகள் முதலுதவி தொடர்பில் மட்டக்களப்பு மக்களுக்குத் தெளிவூட்டல்

(பழுவூரான்)

மட்டக்களப்பில் அமைந்துள்ள மனித உரிமைகள் முதலுதவி மையத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அனூடாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மனித உரிமைத் தொண்டர்களால் அவ்விடயம் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

'நமது குடிமைப் பொறுப்பை நிறைவேற்றுவோம்', 'உரிமைகளைக் காப்பாற்றுங்கள்' என்ற தொனிப் பொருளின் கீழ் மனித உரிமைகள் முதலுதவி மையம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளி பிரதான வீதியிலிருந்து இயங்கி வருகின்றது.

இந்த மனித உரிமைகள் முதலுதவி மையத்தினால் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

மக்கள் மத்தியில் மீறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இம்மையத்திற்கு நேரில் சென்று அல்லது 074 328 0836 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தமது முறைப்பாடுகளை தெரிவிக்கமுடியும்.

இந்த நிலையில், மட்டக்களப்பு சந்திவெளி பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் சேவைகள் தொடர்பிலும், இம்மையத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் முகமாகவும் தொண்டர்களால் சித்தாண்டி, சந்திவெளி, வந்தாறுமூலை, உள்ளிட்ட பல பகுதிகளிலும் இத்துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

உங்களைத் திட்டவோ அடிக்கவோ, சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்யவோ பொய் வழக்குப் போடவோ யாருக்கும் உரிமை இல்லை. எந்தவொரு அரசு அதிகாரியும், அப்படிச் செய்தால் அது உங்கள் அடிப்படை உரிமை மீறுவதாகும். எந்தவொரு அரசாங்க அதிகாரியும் தனது கடமைகளைச் செய்யாமல் புறக்கணிக்கும் போதும் வேண்டுமென்றே தாமதப்படுத்தும், அல்லது தனது கடமைகளைச் செய்ய இலஞ்சம் கேட்கும் எந்தவொரு அரசாங்க அதிகாரிக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது ஒரு குடிமகனாக உங்கள் பொறுப்பாகும் என அத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# பெற்றோரால் வித்தியாசமான முறையில் பாடசாலை அதிபர் கௌரவிக்கப்பட்டார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வவுனியா, புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலய அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் திருமதி கமலாம்பிகை சொக்கலிங்கத்துக்கு பெற்றோர்கள் சிறப்பான கௌரவத்தை வழங்கியுள்ளனர்.

பாடசாலை வளாகத்தை வந்தடைந்த முன்னாள் அதிபர் கமலாம்பிகை மாணவர்கள் புடைசூழ பெற்றோரினால் கூட்ட மண்டபத்திற்கு தூக்கிச் செல்லப் பட்ட நிகழ்வு பிரதேச மக்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.



# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் முதுமை நிலை பயிற்றுனருக்கான தளம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் முற்தடுப்பு முதுநிலை பயிற்றுனருக்கான கணிப்பிடுகளை இலகு படுத்துவதற்கான தளம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்டச் செயலாளர் ஜி.பிரணவனினால் நேற்று வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஷின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேசப் பிரிவுகளிலும் கடமையாற்றும் போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் இளைஞர், யுவதிகளுக்கு கிராம, பிரதேச மட்டங்களில் போதைப் பொருள் பாவனையின் மூலம் ஏற்படும் பிரச்சினைகளையும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் தெளிவுபடுத்தினார்.

இந்த நிகழ்வில், வளவாளராக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஏ.சி.றஹீம், நிகழ்சித் திட்ட அதிகாரி எஸ். நிதர்சனா மற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.












# விஜயகாந்த் நினைவிடத்திற்கு உலகளவில் கிடைத்த அங்கீகாரம்






மறைந்த நடிகரும் அரசியல்வாதியுமான விஜயகாந்தின் நினைவிடத் திடத்திற்கு லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் சார்பில் உலக சாதனை விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வையாளர்களுக்கு உணவு வழங்கும் உலகின் முதல் நினைவுச் சின்னமாக இது போற்றப் படுகிறது.

விஜயகாந்த் கடந்த டிசம்பர் மாதம் உடல்நிலை குறைபாட்டால் காலமானார். தொடர்ந்து, அவரது உடல் கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் அடக்கம் செய்யப் பட்டது.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். தற்போது வரை அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள கோயம்பேடு தே.மு.தி.க. அலுவலகத்தில் நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் அதிகரித்து வருவதாக கூறப்படுகின்றது.

வெளியூர்களில் இருந்து சென்னைக்கு யணம் மேற்கொள்ளும் மக்கள் நிச்சயம் விஜயகாந்தின் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தி வருவதோடு மேலும் பலர் முடி காணிக்கையும் செலுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து பொதுமக்கள் மற்றும் விஜயகாந்தின் ரசிகர்களுக்காக நினைவு இடத்தில் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தான் விஜயகாந்தின் நினைவிடத்தில் இதுவரை 125 நாள்களில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அஞ்சலி செலுத்தி இருக்கின்றனர்.

அதுமட்டும்அல்லாமல்அவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது.

இதனை உலக சாதனையாக அங்கீகரித்து லிங்கன் புக் ஆப் ரெக்கார்ட் சார்பில் உலக சாதனை விருது வழங்கப் பட்டு இருக்கிறது.

மேலும் பார்வையாளர்களுக்கு உணவு வழங்கும் முதல் நினைவு சின்னமாகவும் விஜயகாந்தின் நினைவு இடம் போற்றப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# புதிய பாம்பன் பாலத்தினை கட்டி முடிக்கும் பணி தீவிரம்

அதிகரித்து வரும் பயண தேவைகளை கருத்தில் கொண்டு பாம்பன் கடலில் புதிய ரயில் பாலம் அமைக் கப்படுகிறது.

இந்த பாலத்தின் கட்டுமான பணிகள் 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மதுரை கோட்ட ரயில் நிர்வாகம் தெரிவிக்கையில்,

“ஆங்கிலேயர் காலத்தில் கட்டப் பட்ட பழைய பாம்பன் ரயில் பாலம் 110 ஆண்டு பயன்பாட்டில் இருந்து வந்தது.

குறிப்பிட்ட கால இடை வெளியில் வர்ண பூச்சு செய்தும் கடல் உப்பு காற்று காரணமாக கப்பல்களுக்கு வழி விடுவதற்காக திறக்கப்படும் பாலத்தின் கர்டர் பகுதிகள் துருப்பிடிக்க ஆரம்பித்தது.

சில இடங்களில் துரு காரணமாக இரும்பு பட்டைகளின் கனம் குறைய ஆரம்பித்தது. பாலத்தின் அபாய நிலையால் தொடருந்துகள் 2 கிலோ மீட்டர் பாலப்பகுதியில் 10 கிலோ மீட்டர் வேகத்தில் மட்டுமே இயக்கப்பட்டன.

பராமரிப்பிற்கென ரயில் போக்குவரத்தை அடிக்கடி நிறுத்த வேண்டிய சூழலும் ஏற்பட்டது. தொழில் நுட்ப வல்லுநர்கள் இந்த பாலத்தை தொடர்ந்து பயன்படுத்துவது ஆபத்தை விளைவிக்கும் என கருத்து தெரிவித்தனர்.

இந்த நிலையில், நவீன வசதிகளுடன் 550 கோடி ரூபா செலவில் புதிய பாலம் கட்ட ரயில் வாரியம் முடிவு செய்தது. புதிய பாலம் கடலில் 2.8 கிலோ மீற்றர் நீளத்துக்கு நடுவில் பெரிய கப்பல்கள் சென்று வரும் வகையில் கட்டப்படுகிறது.

நடுவிலுள்ள 72.5 மீட்டர் லிஃப்டிங் கிர்டர் செங்குத்தாக மின் இயந்திரவியல் சக்தி மூலம் திறந்து கப்பல்களுக்கு வழிவிடும். பழைய பாலம் இருபுறமும் ஐந்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் மனித ஆற்றல் மூலம் திறக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய பாலம் செங்குத்தாக திறக்கப்படும் இந்தியாவின் முதல் பாலமாக அமைகிறது. பெரிய கப்பல்கள் சென்று வரும் விதமாக நடுவிலுள்ள லிப்டிங் கிர்டர் 17 மீட்டர் உயரத்துக்கு மேலே செல்லும். இது அருகிலுள்ள சாலை பாலத்துக்கு இணையான உயரம் ஆகும்.

நவீன வசதிகளுடன் தீவிரமாக முன்னெடுக்கப்படும் பாலத்தின் கட்டுமான பணிகள் விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும். அதாவது இந்த ஆண்டு நிறைவடைய முன்னர் பாலத்தின் கட்டுமான பணிகள் நிறைவடையும்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.




# கென்யா மழை வெள்ளத்தில் சிக்கி நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

கென்யாவில் கனமழை வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 170 ஐ தாண்டியது.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் பெய்த கனமழையால் தலைநகர் நைரோபி உட்பட பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில்,வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்கள் மட்டுமின்றி, கட்டட இடிபாடுகளிலும் சிக்கி 120 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர் என கூறப்படும் நிலையில், அவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், வெள்ளப்பெருக்கினால் நாடு முழுவதும் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைரோபியில் உள்ள பழமையான அணையான கிஜாப் சேதமடைந்து, அதன் தடுப்புச்சுவர் இடிந்தது. இதனால் அருகில் உள்ள குடியிருப்பு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும், பல இடங்களில் மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் முறிந்து விழுந்த நிலையில், லட்சக்கணக்கான மக்கள் அங்கு இருளில் மூழ்கி தவிக்கின்றனர்.



# அமெரிக்காவில் மாபெரும் போராட்டங்கள்; கைதானவர்கள் எண்ணிக்கை 2000ஐ கடந்தது

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக போராட்டங்களை முன்னெடுத்தள்ள அமெரிக்க கல்லூரி வளாகங்களில் பொலிஸாரின் கைது நடவடிக்கைள் 2,000 ஐ கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரி வளாகங்களில் 300 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த புதன்கிழமை இரவு முதல் வியாழன் பகல் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கைதானவர்களின் எண்ணிக்கை 2000 கடந்துள்ளதாகவும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, பொலிஸாரால் அவர்களின் கூடாராங்களும் அகற்றப்பட்டுள்ளன.

மேலும், நியூ ஹாம்ப்ஷயரில் உள்ள டார்ட்மவுத் கல்லூரியில் 90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நாட்டில் எவருக்கும் போராட உரிமை உள்ளது. ஆனால் கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்த எவருக்கும் அதிகாரம் இல்லை எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 4

சனிக்கிழமை 04/05/2024

## ஹெட்டிங்லே வீடொன்றில் வெடிப்பொருள்கள் மீட்பு!

மனிடோபா, மே 04

ஹெட்டிங்லே வீடொன்றில் இருந்து பெருமளவிலான வெடி பொருள்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

C2 ▶



# கனடாவில் சீக்கியப் பிரிவினைத் தலைவரின் கொலை தொடர்பில் 3 இந்தியர்கள் கைது!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 04

**பிரிட்டிஷ் கொலம்பியாவின் சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜாரின் கொலை சம்பந்தமாக மூன்று இந்தியப் பிரஜைகளை கனடா அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**ஹர்பீந்தர் சிங் நிஜ்ஜர் ( வயது45) என்ற சீக்கியர் பிரிவினைத் தலைவர், வான்கூவரின் சர்ரே புறநகர் பகுதியில் உள்ள ஒரு பரபரப்பான கார் தரிப்பிடத்தில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி முகமூடி அணிந்த துப்பாக்கி சுடும் குழுவினர் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

C2 ▶

# முதியோரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட மோசடி விடயம் 2 தமிழர்கள் மீதான குற்றம் இன்னும் நிரூபிக்கப்படவில்லை






கனடாவில் முதியவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு தமிழர்களின் மீதான் குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என கனடா ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, சந்தேகநபர்களினால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என தெரிவித்துள்ள புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களின் படங்களை வெளியிட்டு பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

டர்ஹாம் பிராந்தியத்தில் முதியவர்களை குறி வைத்துப் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டனர் என இரு தமிழர்களை கனடாப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இவர்கள் முதியவர்களை இலக்கு வைத்து வங்கி மற்றும் கடன் அட்டை மோசடியில் ஈடுபட்டனர் எனப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், Ajax நகரை சேர்ந்த 27 வயதான லக்சாந்த் செல்வராஜா மற்றும் 25 வயதான அக்சய[illegible]ர்மகுலேந்திரன் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

C2 ▶

இந்நிலையில், சந்தேகநபர்களுக்கு எதிராக 40 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேநபர்களினால் பாதிக்கப்பட்டவர்களில் 90 வயதுடைய தம்பதியரும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை எனத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.



# பூர்வீகக் குடிப் பெண்கள் காணாமல் போனமை; ‘சிவப்பு ஆடை எச்சரிக்கை’ விடுப்பதற்கு முடிவு!

மனிடோபா, மே 04

வின்னிபெக் பகுதியில் பூர்வீகக் குடியைச் சேர்ந்த பெண்கள் காணாமல் போனமை தொடர்பில், சிவப்பு ஆடை எச்சரிக்கை விடுப்பதற்கு கனடாவும், மனிடோபா அரசாங்கமும் திட்டமிட்டுள்ளன.

‘சிவப்பு ஆடை தினத்திற்கு முன்னதாக, அவர்களின் சமூகங்களிலிருந்தும் இந்த உலகத்திலிருந்தும் திருடப்பட்டவர்களை நம் எண்ணங்களில் வைத்திருக்கிறோம், மேலும் அவர்களை எங்கள் செயலில் மையப்படுத்துகிறோம்’ என இந்த அறிவிப்பை வெளியிட்ட அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

‘இன்று, பழங்குடியின பங்காளர்களுடன் இணைந்து சிவப்பு ஆடை எச்சரிக்கை அமைப்பை உருவாக்க இந்த கூட்டாண்மையை நாங்கள் அறிவிக்கிறோம், மேலும் பழங்குடியின பெண்கள், பெண்கள் மற்றும் பாலினம்-பன்முகத்தன்மை கொண்ட மக்களை வீட்டிற்கு அழைத்து வருவதற்கான அடுத்த படிகளை நாங்கள் எடுக்கிறோம்’ என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நெருக்கடியை குறிப்பதற்கான தேசிய நாளினை குறிக்கும் வகையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சிவப்பு ஆடை எச்சரிக்கையானது உயிரிழப்புக்களை தடுக்கும் நோக்குடனும், அன்புக்குரியவர்கள் மீண்டும் தமது உறவினர்களுடன் ஒப்படைக்கப்படுவதனையும் உறுதி செய்கின்றது.

பூர்வீகக் குடிகளின் உயிரிழப்பு வீதமானது ஏனைய பூர்வீகக் குடிகள் அல்லாத பெண்களுடன் ஒப்பிடும் போது ஆறு மடங்கு அதிகம் எனக் கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அவர்கள் காணாமல் போவதற்கும், கொலை செய்வதற்கும் 12 மடங்கு சந்தர்பபங்கள் உள்ளன என ஐந்து வருடங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட தேசிய விசாரணையின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

---

**கனடாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிஜ்ஜர், இந்தியாவின் பஞ்சாப் பகுதியில் தனிநாடு சீக்கிய தேசமான காலிஸ்தான் உருவாக்கம் செய்ய வேண்டும் என பொது மக்களிடம் பிரச்சாரம் செய்த சீக்கியப் பிரிவினைத் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் கனடாப் பிரதமர் வெளியிட்ட அறிக்கையானது, இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

நிஜாரின் கொலையுடன் இந்திய அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதற்கான ~~போதியளவு ஆதாரங்கள் இருக்கின்றன~~ எனப் பிரதமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டெல்லி இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்தது.

இந்நிலையில் இக்கொலைச் சம்பவம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை கைது நடவடிக்கைகளை அறிவித்த பொலிஸ் துறைக் கண்காணிப்பாளர் மன்தீப் முகர்ஜி, (Mandeep Mooker) கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் கரண் பிரார் (22), கமல்பிரீத் சிங் (22), மற்றும் கரன்பிரீத் சிங் (28) ஆவர் என்று தெரிவித்தார்.

இம்மூவரும் எட்மண்டன், அல்பெர்ட்டாவில் வசித்து வந்தனர் எனவும், அங்கேயே கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

நீதிமன்ற பதிவுகள் அவர்கள் மூன்று பேர் மீதும் முதல் நிலை கொலை குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக காட்டுகிறது.

“இந்த விஷயங்கள் தொடர்பாக தனித்தனி மற்றும் தெளிவான விசாரணைகள் நடந்து வருகின்றன.

நிச்சயமாக இன்று கைது செய்யப்பட்டவர்களின் தொடர்பு மட்டும் இதில் அடங்காது,” என்றும் உதவி ஆணையர் டேவிட் டெபோல் கூறினார்.

கொலை வழக்கில் வேறு சிலரும் தொடர்புடையிருக்கலாம், மேலும் கைது நடவடிக்கைகள் அல்லது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

---

**ஹெட்டிங்லே...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வின்னிபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு பொது மக்களின் உதவியை நாடுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பெரும்தொகை வெடிபொருள்கள், துப்பாக்கிகள் என்பன கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

எனினும், அளவு குறித்து பொலிஸார் எந்த தகவலையும் இதுவரை வெளியிடவில்லை.



# நோவா ஸ்கோஷியா முதல்வர் ஹூ்ட்சனின் வெளிநாட்டுப் பயணம் குறித்துச் சர்ச்சை!

கனடாவின் நோவா ஸ்கோஷியா மாகாண முதல்வர் ரிம் ஹூ்ட்சன் இரகசியமாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹூ்ட்சன் அண்மையில் ஸ்பெய்னுக்கு விஜயம் செய்திருந்தார்.

வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்தப் பயணம் தொடர்பில் முதல்வர் அலுவலகம் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயணம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

சுற்றுலாத்துறை, ஆய்வுத்துறை மற்றும் இரு தரப்பு வர்த்தக விடயங்களை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயத்தை முதல்வர் மேற்கொண்டார் என முதல்வர் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச பயணங்கள் பகிரங்கமானவை எனவும் இதில் மூடி மறைப்பதற்கு எதுவுமில்லை என முதல்வர் ஹூ்ட்சன் தெரிவித்திருந்தார்.

முதல்வர் உலகைச் சுற்றி வருகிறார் எனவும் இதனால் நோவா ஸ்கோஷியா மாகாண மக்களுக்கு எதுவித நலனும் கிடைக்கவில்லை எனவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.



## உலகக் கிண்ணஉதைபந்தாட்டத்துக்காக டொரன்டோவுக்கு 104 மில்லியன் டொலர்

ஒன்ராரியோ, மே 04

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ணஉதைபந்தாட்டப் போட்டிகளை டொரன்டோவில் நடத்துவதற்கு கனடிய அரசாங்கம் 104 மில்லியன் டொலர்களை டொரன்டோ நகரத்திற்கு வழங்கியுள்ளது.

இந்த சர்வதேச போட்டித்தொடருக்கான சிறந்த இடமாக டொரன்டோ இருக்கும் என விளையாட்டு, உடல்சார் நடவடிக்கைக்கான அமைச்சர் கார்லா கோல்ட்ரோ தெரிவித்தார்.

டொரன்டோவில் இடம்பெறும் போட்டிகளுக்கான செயற்பாட்டு மற்றும் மூலதன செலவுகளுக்கு இந்த நிதியுதவி உதவும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதபந்தாட்டப் போட்டிகளின் ஆறு போட்டிகள் டொரன்டோவில் நடைபெறவுள்ளன.

ஏனைய போட்டிகளில் சில வென்கூவரிலும், அமெரிக்க மற்றும் மெக்சிகோவின் நகரங்களிலும் இடம்பெறவுள்ளன.

## 2023 ஆம் ஆண்டில் கனடா போஸ்ட் 748 மில்லியன் டொலர்கள் நட்டத்தில்

ஒன்ராரியோ, மே 04

2023ஆம் ஆண்டில் கனடா போஸ்ட் 748 மில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது நிதி நிலைமை மிகவும் மோசமான வழியில் பயணிப்பதாக கனடா போஸ்ட் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மே 3ஆம் திகதி வெளியான வருடாந்த அறிக்கையில், எதிர்வரும் வருடங்களில் மிகப் பெரிய, நிலையான நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் கனடா போஸ்ட் நட்டத்தைப் பதிவு செய்து வருகின்றது.

இது வரை 5 பில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# தேர்தலில் வெளிநாட்டுத் தலையீடுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை

## விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு






ஒன்ராரியோ, மே 04

வெளிநாட்டுத் தலையீடு நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என பெடரல் விசாரணைக் குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியினரின் தேர்தல் வெற்றியில் சீனாவின் வெளிநாட்டுத் தலையீடு பெரும் தாக்கத்தைச் செலுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளது.

2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் கிடைத்த புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களைத் தொடர்ந்து, பெடரல் விசாரணைக் குழுவொன்று கடந்த சில வாரங்கள் பல்வேறு சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தது.

இந்த விசாரணைகளின் பூர்வாங்க அறிக்கையை மேரி-ஜோசே ஹோக் மே 3ஆம் திகதி வெளியிட்டார்.

எனினும், சில சிறிய தேர்தல் தொகுதிகளில் வெளிநாட்டுத் தலையீடுகள் தாக்கத்தை செலுத்தியிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு கரிசனைகளுக்கு மத்தியிலும் டொரன்டோ பல்கலையில் கூடாரங்கள்!



ஒன்ராரியோ, மே 04

பாதுகாப்பு கரிசனைகளுக்கு மத்தியில் டொரன்டோ பல்கலைக்கழகத்தில் பலஸ்தீன ஆதரவுப் போராட்ட கூடாரங்கள் நீடித்திருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மே 3ஆம் திகதி டொரன்டோவில் காலநிலையானது அதிக காற்று மற்றும் மழையுடன் காணப்பட்ட போதிலும், போராட்டக்காரர்கள் உறுதியுடன் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடியப் பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் முதல் அமைக்கப்பட்டு வரும் பலஸ்தீன ஆதரவு கூடாரங்களின் ஒரு கட்டமாக, நேற்று முன்தினம் மே 2ஆம் திகதி டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

வியாழக்கிழமை இரவு கூடாரத்தில் கழித்த போராட்டக்காரர்கள், இரவு அமைதியாகக் கழிந்ததாக தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக் கூடாரங்களில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் டொரன்டோ பல்கலைக்கழக மாணவர்கள் இல்லை எனப் பெயர் கூற விரும்பாத பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி, மனிதநேய நிவாரணத்துக்காக லெபனானுக்கு 65 மில்லியன் டொலர்கள்!

## கனடா வழங்குகின்றது

ஒன்ராரியோ, மே 04

லெபனானுக்கு 65 மில்லியன் டொலர்கள் அபிவிருத்தி நிதி மற்றும் மனிதநேய நிவாரணத்தை கனடா வழங்கவுள்ளது.

அபிவிருத்தி உதவிக்கான 38 மில்லியன் டொலர்கள் மற்றும் மனிதநேய உதவிக்கான 27 மில்லியன் டொலர்கள் என்பன இந்த நிதியுதவியில் அடங்குகின்றன என சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் அஹ்மட் ஹசன் தெரிவித்தார்.

லெபனானில் மனிதநேய உதவி தேவையாகவுள்ளவர்களுக்கு இந்த நிதி பெரும் ஆதரவாக இருக்கும் என அமைச்சர் ஹசன் குறிப்பிட்டுள்ளார்.

உணவு, நீர் மற்றும் சுகாதார பராமரிப்பினை வழங்குவதற்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அபிவிருத்தி நிதியுதவியானது, ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்படும் எனவும், உள்ளூர் விவசாயிகள், பெண் தலைமையிலான தொழில்கள் மற்றும் அரசியலில் உள்ள பெண்களுக்கு இந்த நிதி பிரதானமாக வழங்கப்படும் எனவுன் அமைச்சர் கூறினார்.